# மணிமேகலை

## சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை

ஐம்பெருங் காப்பியங்களுள் இரண்டாவதாகக் கொள்ளப் பெறும் மணிமேகலைக் காப்பியம் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. சிலப்பதிகாரத்தைப் போல முப்பது காதைகளைக் கொண்டதாகும். மணிமேகலையில் பத்தொன்பதாவது காதையாக 'சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிய காதை' அமைந்துள்ளது.

கோவலன் இறந்ததும் மாதவி துறவு பூண்டாள்; மாதவியின் மகளாகிய மணிமேகலையும் துறவுக்கோலம் புனைந்து தம் கையில் அமுதரசுரபி என்னும் பிச்சைப்பாத்திரத்தை ஏந்தி உலக அறவியல் தங்கியிருப்பதை அறிந்த மாதவியின் தாயாகிய சித்திராபதி உள்ளம் கொதித்து, துறவுக்கோலம் பரத்தையர் குலத்திற்குப் பொருந்தாது என வருந்தினாள். மணிமேகலையின் துறவினை மாற்றித் தம் பரத்தையர் குலத்தொழிலில் ஈடுபடுத்துவதற்காக சித்திராபதி சோழநாட்டின் இளவரசன் உதயகுமாரனைச் சந்திக்கின்றாள். உதயகுமாரனும் மணிமேகலையும் முற்பிறப்பில் காதலர்கள் ஆவர். மணிமேகலை உலகவறவியல் இருப்பதை அறிந்த உதயகுமாரன் அவன் உவவனத்தில் மணிமேகலையைக் கண்டது முதல் நடந்த பல நிகழ்ச்சிகளைச் சித்திராபதியிடம் கூறி மணிமேகலையின் குணநலன்களைப் போற்றிக் கூறுகின்றான். ஆயினும் உதயகுமாரன் மனத்தை மாற்றிய சித்திராபதி அவனை உலகவறவிக்கு அனுப்புகின்றாள்; உலகவறவியல் மணிமேகலையைக் கண்ட உதயகுமாரன் அவளிடம் 'நீ துறவுக்கோலம் பூண்ட காரணம் யாது?' எனக் கேட்கின்றான்.

மணிமேகலை, உதயகுமாரன் தன் முற்பிறப்புக் கணவன் என்பதால் அவனை வணங்கிப் பணிந்து, 'பிறப்பு, மூப்பு, பிணிப்பட்டு வருந்துதல், இறத்தல் ஆகிய இடும்பைக் கொள்கலம் மக்கள் யாக்கை என உணர்ந்து, மிக்க நல்லறத்தை விரும்பித் துறவு பூண்டதாக' விளக்கிக் கூறினாள். உதயகுமாரனிடமிருந்து தப்பிக்க விரும்பிய மணிமேகலை அங்கிருந்த சம்பாபதி கோயிலின் உள்ளே சென்று சம்பாபதி தெய்வத்தை வணங்கினாள். அங்கு அவள் மணிமேகலா தெய்வம் தனக்கு முன்னர் அருளிய மந்திரத்தைக் கூறி,

காயசண்டிகையின் வடிவத்தைப் பெற்று, அமுதசுரபியைக் கையிலேந்தி வெளியே வந்தாள். அவ்வாறு தோன்றியவள் மணிமேகலையே என்பதை உணராத உதயகுமாரன் 'உள்ளே சென்ற மணிமேகலை கோயிலுக்குள் ஒளிந்து கொண்டாள்' என நினைத்தான்.

உதயகுமாரன் கோயிலினுள் புகுந்த சம்பாபதியை வணங்கி வழிபட்டு மறைந்து ஒளிந்துகொண்ட மணிமேகலையைத் தன் பார்வையில் காட்டவில்லையானால் தான் அவ்விடத்தை விட்டு நகரப்போவதில்லை என சம்பாபதி தெய்வத்தின் திருவடியைப் பணிந்து வணங்கிச் சூளுரைத்தான். உதயகுமாரனின் சூளுரையைக் கேட்ட சித்திரமாக அமைந்திருந்த சம்பாபதி தெய்வம் அவனிடம் 'நின் சூளுரையால் ஒரு பயனும் இல்லை' என்றது. இதைக்கேட்ட உதயகுமாரன் மனம் நொந்தான். தன்முன்னுள்ள தெய்வம் 'மணிமேகலையை மறப்பாயாக' என்றது அவனுக்கு வியப்பைத் தந்தது; தெய்வத்தன்மை மிக்க சித்திரமாகிய சம்பாபதி பேசியதும் உதயகுமாரனுக்குப் பெருவியப்பாக இருந்தது. இவற்றையெல்லாம் மணிமேகலையைக் கண்ட பின்னர் அறிவோம் என நினைத்து உதயகுமாரன் அவ்விடத்தை விட்டு நீங்கினான்.

உதயகுமாரன் பார்வையிலிருந்து தப்பத் தொடர்ந்து காயசண்டிகையின் வடிவம் கொள்ளுதலே சிறந்தது என உணர்ந்த மணிமேகலை, சம்பாபதியின் கோயிலிருந்த அமுதசுரபியைக் கையிலேந்திக் கொண்டு, பலவிடங்களுக்கும் சென்று பசித்தோர் துயர் போக்கி வரலானாள். ஒருநாள் அந்நகரத்தின் சிறைக் கோட்டத்திற்குச் சென்று, அங்குள்ளோர்க்கு இன்மொழிகளைக் கூறி அமுதாகிய உணவைப் படைத்தாள். சிறைக் காவலர்கள் மணிமேகலையின் உணவு அளிக்கும் அறச்செயலையும், பிச்சைப் பாத்திரமாகிய அமுதசுரபியின் சிறப்புக்களையும் சோழமன்னனுக்கு அறிவிக்கக் கருதி மன்னனை அடைந்தனர். சிறைக்காவலர்கள் மன்னனைப் பணிந்து வாழ்த்தினர்.

பின்னர் அவர்கள் மன்னனிடம் 'மடந்தை ஒருத்தி சிறைக் கோட்டத்திற்குள் வந்து உம்மை வாழ்த்துக்கூறி, தம் கையில் ஒரு பிச்சைப் பாத்திரத்தைக் கொண்டு அங்குள்ள யாவர்க்கும் குறையாது உணவளிக்கின்றாள்; இந்த அதிசயத்தைக் கூறவே இங்கு உம்மை அடைந்தோம்' என்றனர். இதைக்கேட்ட சோழ மன்னன் அவளைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஆணையிட்டான். மன்னனின் ஆணைப்படி மணிமேகலை மன்னனிடம் அழைத்துச் செல்லப்பட்டாள்.

சோழமன்னன் மணிமேகலையிடம் நீ யார்? உன் கையிலுள்ள பிச்சைப்பாத்திரம் எப்படிக் கிடைத்தது? என்று வினாவினான். மன்னனிடம் மணிமேகலை 'வேந்தே நீடு வாழ்க!'; இப்பகுதியில் வேற்று வடிவம் கொண்டு திரியும் நான் ஒரு விஞ்சைமகள்; இது பிச்சைப் பாத்திரம்; இதனை தெய்வம் ஒன்று (மணிமேகலா தெய்வம், ஆபுத்திரன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரம்) எனக்கு அருளியது. இப்பிச்சைப் பாத்திரமும் தெய்வத்தன்மை உடையது. எனது யானைப் பசியென்னும் தீராப் பசிநோயைத் தீர்த்தது (காயசண்டிகையின் பசியைப் போக்கியது; மணிமேகலை காயசண்டிகை வடிவத்திலேயே மன்னனிடம் தோன்றினாள்) பசியால் வாடுபவர்களுக்கு உயிர் கொடுக்கும் மருந்தாக உள்ளது என்றார். பின்னர் நினக்கு யாது வேண்டும் எனக் கேட்ட மன்னனிடம் மணிமேகலை சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றவேண்டும் என்றாள். சோழ மன்னனும் அவ்வாறே சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றினான். இதுவே சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிய காதையாகும்.

மணிமேகலையின் பிறப்பு வரலாறு சிலப்பதிகாரத்தில் கூறப்படுகின்றது. மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலையின் பருவச் செயல்கள் மட்டுமே கூறப்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றே மணிமேகலை சிறைக்கோட்டத்தை சோழமன்னனிடம் வேண்டி அறக்கோட்டமாக்கியது ஆகும்.

கண்ணகி என்னும் குலமகளை/ வணிக குலப்பெண்ணை இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காப்பியத்தலைவி ஆக்கினார். சீத்தலைச் சாத்தனார் கணிகையர் குலத்தவளான மணிமேகலையைத் தம் காப்பியத்தில் துறவியாக்கியிருப்பது புரட்சியும் புதுமையும் ஆகும். மணிமேகலைக் காப்பியத்தில் மணிமேகலை பசிக் கொடுமையைத் தணிக்கின்றாள்; சாதுவன் மதுவை ஒழிக்கின்றான். ஆபுத்திரன் சாதிக் கொடுமையைச் சாடுகின்றான். ஆதலால் மணிமேகலை புரட்சிக் காப்பியமாகும்.

## உதயகுமாரன் வியப்பும் பெயர்வும்

உத்ய குமாரன் உள்ளம் கலங்கிப்
பொதியறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி;
'அங்கவள் தன்திறம் அயர்ப்பாய்' என்றே
செங்கோல் காட்டிய தெய்வமம் திப்பியம்;
பையர வல்குல் பலர்பசி களையக்
கையிலேந்திய பாத்திரம் திப்பியம்;
"முத்தை முதல்வி அடிபிழைத் தா"யெனச்
சித்திர முலைத்த இதூஉம் திப்பியம்;
இந்நிலை யெல்லாம் இளங்கொடி செய்தியின்
பின்னறி வா" மெனப் -

"சித்திரம் கூறியதைக் கேட்ட உதயகுமாரன் உள்ளம் கலங்கினான். காற்றுப் புகாத நிலவறைக்கண்ணே அடைபட்ட வரைப் போன்று உடல் புழுங்கி வருத்தமுற்றான். 'மணிமேகலையிடத்தே கொண்ட எண்ணத்தை மறந்து விடுவாயாக' என்று செங்கோண்மை காட்டிக் கூறிய தெய்வமும் வியத்தற்குரியது! அரவுப்படம் போன்ற அல்குலினை உடையாள், பலர் பசியினையும் போக்குமாறு கையிலே ஏந்தியுள்ள உணவு வற்றாத பாத்திரமும் வியப்புத் தருவது!' அனைவருக்கும் மூத்த முதல்வியாகிய சம்பாபதியின் திருவடிகளிலே பிழைச்சொல் கூறித் தவறு செய்தாய்' என்று, சித்திரம் சொன்ன இதுவும் வியப்புத்தருவது! இந்த நிலைமை எல்லாம் மணிமேகலையின் செயல்களினாலே பின்னர் அறிந்து கொள்ளுவோம்'' என்று உதயகுமாரன் நினைத்தான்.

CPA College

## புகார் நகரில் மணிமேகலை

"ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்; அவர்
மேற்சென் றளித்தல் விழுத்தகைத்து' என்றே,
நூற்பொருள்உணர்ந்தோர் நுனித்தனராம்" என,
முதியாள் கோட்டத் தகவையின் இருந்த
அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்
பதியகம் திரிதரும் பைங்கொடி நங்கை, -

"ஆற்றா மாக்கட்காகச் சென்று இரந்து பெறுதலும், பெற்றதை அவர்க்கட்கு உதவுதலும், பிக்குணியராகி இரந்து வாழ்வோரின் கடமையாகும்.' எனவே, 'அவர் இருக்குமிடத்தே சென்று அவர்க்கு உணவளித்தலே சிறந்த தன்மையாவது' என்று அறநூற்பொருள் உணர்ந்தோரும் நுட்பமாக உரைத்தார்கள்" என்று மணிமேகலை கருதினாள். சம்பாபதியின் கோயிலுள்ளே இருந்த அமுதசுரபியைக் கையிலே எடுத்துக்கொண்டு, புகார் நகரத்தின் பலவிடங்களிலும் உண்பாரை நாடிச் சுற்றிவரவும் தொடங்கினாள்.

CPA College

## காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலை மன்னனிடம் பிச்சைப் பாத்திரத்தின் பெருமை கூறல்

- ஆயிழை உரைக்கும்!
'விரைத்தார் வேந்தே!' நீநீடு வாழி!
விஞ்சை மகள்யான்; விழவணி மூதூர்
வஞ்சந் திரிந்தேன்; வாழிய பெருந்தகை!
வானம் வாய்க்க மண்வளம் பெருகுக!
தீதின் றாக, கோமற்கு! ஈங்கீது
ஐயக் கடிஞை, அம்பல மருங்கோர்
தெய்வம் தந்தது; திப்பிய மாயது;
யானைத் தீநோய் அரும்பசி கொடுத்தது;
ஊனுடை மாக்கட்கு உயிர்மருந்து இது'வென -

ஆயிழையாள் சொல்வாளானாள்: "மண மாலை யணிந்த வேந்தே! நீ நீடுழி வாழ்க! யான் வித்தியாதர நங்கை, இந்திர விழாவின் அணிபெற்றுத் திகழும் இத் தொன்னகரிடத்தே ஒரு சாபத்தால் வந்து திரிந்து வந்தேன். பெருமானே! வாழ்க நீ! வான்மழை தவறாது நின் நாட்டிலே வாய்ப்பதாக! மண்வளம் நின்னாட்டில் பெருகுவதாக! கோமானாகிய நினக்குத் தீமை இல்லாது நன்மையே என்றும் பெருகுக! இங்கே என் கையிலிருப்பது ஒரு வியப்பிற்குரிய பாத்திரம். அம்பலத்திடத்தே ஒரு தெய்வம் எனக்குத் தந்தது. மிகத் தெய்வத்தன்மை பொருந்தியது யானைத்தீ நோயாகிய, தணித்தற்கரிய பெரும் பசியினையும் இது போக்கியது. பசியினால் உடல் தளர்ந்த மக்கட்கு, உணவு சுரந்து அளித்து, உயிர்காக்கும் மருந்து இது" என்றனள் மணிமேகலை.

CPA College